# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார் | வணிக மாத இதழ்

Volume: 14 | Issue : 12 | MARCH 2026 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE










ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் ஏற்பாட்டில் நடைபெற்ற

## சர்வதேச மகளிர் தின நிகழ்ச்சியில் மகளிர் பங்கேற்பின் அரங்கம் நிறைந்த காட்சி


அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்
METRO
மெட்ரோ ஷூ மார்ட்
16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343


JaiGenga Uniforms जेयगंगा यूनिफाम
133-A, East Masi Street, 4 Feet Lane, Madurai - 625 001.
Email : jaigenga@gmail.com | Website : www.jaigenga.com
89035 34438, 887059 4105
ESTD : 1968
Mfrs. Hospital Dress Material & Uniform, School & College Lab Coats, Aprons Industrial Uniform, Hotel Industry Uniform, Pharmaceuticals Drugs Mfrs. Dress Wears
Rs. 1100 | 1200 MANAGER
Rs. 1100 / 1200 Waiter
100/-
30/-
Waiter Rs. 1100 | 1200
CHEF COAT HALF 600 | 700 FULL,HAND 700 | 800
Waiter 700 | 800
Hotel Uniforms 2 Years Warranty
T-SHIRTS Rs. 250 | 300 | 400
Rs. 700 800
Security Rs. 800 900
Buff Cap Rs. 100
Net Cap Rs. 25 / Rs. 60
Rs.70/- Pair
Rs. 400/- Pair Work Shoe
Apron Rs. 80, 100 130, 150
Waist Coat 180/- 280/- 330/-
Waist Coat 330 to 400
COAT 300 / 500


வாடகை / ஒத்திக்கு
133-கீழமாசி வீதி, மதுரை-1. போலீஸ் ஸ்டேஷன் அருகில்
தரை தளம் ( ஜெய்கெங்கா வாணிபம்)
1 வது மாடி, 2வது மாடி 1000 ச.அடி
மாத வாடகை Rs.25000/- ஒத்திக்கு Rs.2000000
ஜெய்கெங்கா நிறுவன ஸ்தாபகர் பிதாமகர்
K.N.K.ராமஜெயம் 8903534438
jaigenga@gmail.com


Ananda Nilayam
Mayflower
The Banquet Hall A/C
Location - Google Map
Marriage Function
Betrothal
Naming Ceremony
Birthday Party
Puberty
Get-to-gether
Hall available for all type of functions
Address: 161F, Salaipillaiyar Koil Street, Kamarajar Salai, Madurai - 625001
For Bookings - Contact: 94439 30728 / 86100 06493 / 92442 31583

# தலைவர் அறிக்கை

அஸ்கிதெங்கோ மொன்னு பொரெ

## நமஸ்கார்...

K.K. தினேஷ், தலைவர்

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், 2010ம் ஆண்டு, விமானத்துறை அமைச்சர் திரு. பிரஃபுல் பட்டேல் காலம் முதலே நமது மதுரை விமான நிலையத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்த கோரிக்கைகளை அளித்து வந்துள்ளது. 2013ல் சர்வதேச தரத்துடன், சரக்கு விமானங்கள் இயக்குவதற்கு கோரிக்கை வைக்கப்பட்டது. அப்போது நடைபெற்ற போராட்டத்தில் நமது சேம்பர் பங்கேற்றது.

மதுரையிலிருந்து துபாய்க்கு விமான சேவையைத் துவக்க, துபாயில் நடைபெற்ற ஏர் இந்தியா நிறுவன அதிகாரிகளுடனான சிறப்புக் கூட்டத்தில், நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் சார்பாக முன்னாள் தலைவர் திரு. K.K.G. பிரபாகரன் அவர்கள் கலந்து கொண்டு தரவுகளை வழங்கினார். பின்னர் மதுரை-துபாய் விமான சேவையும் துவங்கியது குறிப்பிடத்தக்கது.

நீண்டகால கோரிக்கையான சர்வதேச தரம், இப்பொழுது பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களால் கிடைத்துள்ளது.

ஆம், நமது பாரதப்பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை, கடந்த மார்ச் 10ம் தேதி, மதுரை விமான நிலையத்தை அதிகாரப்பூர்வமாக பன்னாட்டு விமான நிலையமாக அறிவித்தது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

இதனால் தென் தமிழகத்தில் சுற்றுலா, வர்த்தகம் மற்றும் தொழில் வளர்ச்சி பெருமளவில் அதிகரிக்கும். மேலும், கூடுதல் சர்வேதச விமானங்கள் நேரடியாக மதுரைக்கு வர வழி வகுக்கும்.

இந்த ஏற்றம் தென் தமிழக மக்கள் சென்னை அல்லது திருச்சி செல்ல வேண்டிய அவசியமின்றி, மதுரையிலிருந்தே நேரடியாக உலக நாடுகளுக்கு பயணம் செய்ய உதவும். இனி வரும் காலங்களில் மேலும் பல நாடுகளுக்கு நேரடி விமான சேவைகள் தொடங்க வாய்ப்புள்ளது.

அவரது இந்த அறிவிப்புக்கு தென் தமிழக மக்கள் அனைவரின் சார்பாக, நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மதுரை விமான நிலையத்திற்கு சர்வதேச தரம் கிடைக்கவும், இந்திய விடுதலைக்காகப் போராடியவரும், சமூக சேவகரும், தர்மசீலருமான மதுரை காந்தி என்.எம்.ஆர். சுப்பராமன் அவர்களின் பெயரை வைக்கவும் எங்களது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அமைச்சகத்திற்கு பலமுறை கோரிக்கையை அளித்துள்ளது. இதுவும் நிறைவேறும் என்று நாம் நம்புகிறோம்!.

நன்றி.

## SOURASHTRA CHAMBER OF COMMERCE
## BOARD OF MEMBERS
## YEAR 2024-2026

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| K.K. Dinesh | President | 98421 16461 |
| T.R. Mohanram | Imm. Past President | 93441 01432 |
| K.K. Kubendran | Vice President | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | General Secretary | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Treasurer | 94439 30728 |
| S.G. Srinivasan | Joint Secretary | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Joint Secretary | 93441 52068 |
| V.G. Ramdoss | External Aff. / EC Member | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | EC Member | 90809 51577 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | EC Member | 98655 45048 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| K.K. Dinakaran | EC Member | 98409 60833 |
| K.V. Kumaresan | EC Member | 98940 51735 |
| S.S. Ramsundar | EC Member | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | EC Member | 94422 44648 |
| T.M. Rubesh Babu | EC Member | 95000 35200 |
| S.S. Premkumar | EC Member | 96293 42295 |
| S.R. Sundarnath | EC Member | 92444 03917 |
| M.M. Dhanasekaran | EC Member | 98421 58085 |
| K.B. Sivaprakash Babu | EC Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | EC Member | 99524 22260 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| Kumaran B. Jaghuva | Yr. 2019-2022 | 99949 26348 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

| Patron Members | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| (Late) K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |

| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| E.R.K. Vignesh Babu | Chairman | 94422 44648 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| Bhaskar Laguduva | Member | 82178 93697 |
| K.K. Shankar | Member | 97881 62559 |
| K.K. Ramkumar | Member | 98421 40007 |



# பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- A.B. குமரேஷ் பாபு

**17.02.2026** – ஸௌராஷ்ட்ர சேம்பர்–ன் 9வது செயற்குழு கூட்டம் கடந்த பிப்ரவரி மாதம் நடைபெற்றது. கூட்டத்திற்கு சேம்பர் குழுவினர் பலர் கலந்து கொண்டனர். சேம்பர் தலைவர் திரு. கே.கே. தினேஷ் அவர்கள் கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார்.

**19.02.2026** – சேம்பர் ஆயுட்கால உறுப்பினர் திரு. கே.கே. தீபக் அவர்களின் இல்ல திருமண வரவேற்பு விழாவில் சேம்பர் குழுவினர் கலந்து கொண்டு மணமக்களுக்கு நினைவுப்பரிசை வழங்கி வாழ்த்தினர்.

**21.02.2026** – சேம்பர் ஆயுட்கால உறுப்பினர் திரு. கே.பி. சரவண குமார் அவர்களின் இல்ல திருமண வரவேற்பு விழாவில் சேம்பர் குழுவினர் கலந்து கொண்டு மணமக்களுக்கு நினைவுப்பரிசை வழங்கி வாழ்த்தினர்.

**10.03.2026** – மகளிர் தினத்தை முன்னிட்டு, மகளிர்க்கான சிறப்பு நிகழ்ச்சி மாலை 5.30 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு சிறப்ப விருந்தினராக முனைவர். K.S. கோமதி, முதல்வர், மதுரை காந்தி என்.எம்.ஆர். சுப்பாராமன் மகளிர் கல்லூரி அவர்களும், கௌரவ விருந்தினராக முனைவர் K. மங்கல லக்ஷ்மி ப்ரீதம், மூத்த ஆலோசகர், ப்ரீதம் பன்நோக்கு மருத்துவமனை அவர்களும் கலந்து கொண்டார்கள். சிறந்த பெண் தொழில் முனைவோருக்கான விருதை திருமதி. L.S. சந்தியா சங்கர், ஸ்ரீ துர்கா ஆரோமேட்டிக்ஸ், சென்னை திருமதி. பவானிஸ்ரீ விக்னேஷ், Founder & CEO., Raamiyas by Sakunthala மற்றும் மருத்துவர். M.K. சித்ரா, சரவணா சர்ஜிகல்ஸ் ஆகியோருக்கு வழங்கி கௌரவித்தது. இந்த நிகழ்ச்சி சேம்பர் தலைவர் திரு. கே.கே. தினேஷ் அவர்கள் தலைமையில் துவக்கப்பட்டு, பின்னர் திருமதி. சந்திரகலா குமரேஷன் அவர்களின் பொறுப்பில் முழுவதும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

முக்கியமாக, இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற மகளிர் உறுப்பினர்கள் மற்றும் இல்லத்தரசிகளுடன் பேங்கேற்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அழகான பயனுள்ள நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்தப் பரிசுகள் அனைத்தும், திருமதி. சந்திரகலா குமரேசன், திருமதி. துர்கா மோகன்ராம், திருமதி. வாசுகி ராம்தாஸ், திருமதி. வரலட்சுமி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. சாவித்ரி ஸ்ரீதர் ஆகியோர் பங்களிப்பில் வழங்கப்பட்டது. மேலும், திருமதி. வசந்தி சேதுராம் அவர்கள் அறுசுவை உணவு விருந்தை வழங்கினார்.



# இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- E.R.K. விக்னேஷ் பாபு

சென்ற பிப்ரவரி மாத இதழ் ஜாஸ்மின் டவல்ஸ் நிறுவன இயக்குநர் திரு. ரித்தன் நயன் தக்கர் அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது மகிழ்ச்சியளிக்கிறது. இந்த சந்திப்பில் கலந்து கொண்ட எனது குழு உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மகளிர் தின நிகழ்ச்சி வெகு விமரிசையாக நமது சேம்பர்–ல் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பெருமளவில் மகளிர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மகளிர் தரும் ஆதரவே, வளர்ச்சிக்கு வேர். சேம்பர் மென்மேலும் வளரும் என்ற நம்பிக்கை இதன்மூலம் பிறக்கிறது.

நாட்டில் தற்போது போர் சூழல் நிலவி வரும் நிலையில், சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதைக் காண முடிகிறது. பல்வேறு உணவு சார்ந்தத் துறையினர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். நம் சமூகத்தில், கேட்டரிங் துறையில் இருப்பவர்கள் பலர். அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்தத் தட்டுப்பாட்டினால், தேடிவரும் ஆர்டர்களை ஏற்றுக்கொள்ள முடியாத சூழல் நிலவுகிறது என்று இத்துறை சார்ந்தவர்கள் தெரிவித்தது மிகுந்த கவலையளிக்கிறது. உங்கள் வருத்தத்தை நமது சேம்பர் பகிர்ந்து கொள்கிறது. இந்த அசம்பாவித சூழல் விரைவில் மாறும் என்ற நம்பிக்கையுடன் காத்திருப்போம். நன்றி

## திருக்குறள்

**செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்**
**வினைக்கரிய யாவுள காப்பு**

**பொருள்:** சினேகத்தை விடத் தேடிச் செய்து கொள்ள வேண்டிய சிறப்புடையது வேறு என்ன இருக்கிறது? அதைப்போலக் காரியத்திற்குச் சிறப்பான பாதுகாப்பும் வேறு என்ன உண்டு?

அதிகாரம் 79 | நட்பு | அங்கவியல்

**Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account**

Name : Sourashtra Chamber of Commerce
Bank : State Bank of India
Acct. No. : 30134805614
Branch : Madurai City
IFSC : SBIN0011544

SCAN & PAY





Best Compliments
BVK GROUP
Bala V Kutti
Founder & Chairman
Indus Finance Ltd
Indowind Energy Ltd
EverOn Power Ltd
BeKae Properties P Ltd
BVK Foundation
4th Floor (NW), Kothan Building, 114, M G Road, Nungambakkam, Chennai - 6000 834.
No 603, Keshava -BKC, Mumbai - 400 051.
Chennai | Madurai | Aralvoimozhi | Nettur | Gadag | Mumbai

# வளர்ந்து வரும் படைப்பாக்கத் தொழில் Creative Industries

படைப்பாக்கத் தொழில்கள் (Creative Industries) என்பது தனிமனிதனின் படைப்பாற்றல், திறமை மற்றும் அறிவுசார் சொத்துரிமை (Intellectual Property) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வருமானம் மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்கும் துறைகளைக் குறிக்கும். இத்தொழில்கள் வெறும் உற்பத்தி சார்ந்ததாக இல்லாமல், புதிய சிந்தனைகள் மற்றும் கலைநயம் மூலம் மதிப்பைக் கூட்டுகின்றன.

**படைப்பாக்கத் தொழில்களின் முக்கியத் துறைகள்:**

**கலை மற்றும் கலாச்சாரம்:** ஓவியம், சிற்பக்கலை, புகைப்படக் கலை மற்றும் நடனம்.

**இலக்கியம் மற்றும் வெளியீடு:** கவிதை, கதை எழுதுதல், இதழியல் மற்றும் புத்தக வெளியீடு.

**ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு:** திரைப்படம், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், இசை மற்றும் வானொலி.

**வடிவமைப்பு (Design)**: கட்டடக்கலை (Architecture), ஆடை வடிவமைப்பு (Fashion Design) மற்றும் உட்புற அலங்காரம்.

**தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல்:** மென்பொருள் உருவாக்கம், வீடியோ கேம் தயாரிப்பு, விளம்பரத்துறை மற்றும் சமூக வலைதள உள்ளடக்க உருவாக்கம்.

**இதன் முக்கியத்துவம்:**

**பொருளாதார வளர்ச்சி:** இத்துறை உலகளவில் மிக வேகமாக வளர்ந்து வரும் ஒரு பொருளாதாரப் பிரிவாகும்.

**அறிவுசார் சொத்து:** இங்கு உருவாக்கப்படும் யோசனைகள் மற்றும் படைப்புகளுக்கு சட்டபூர்வமான காப்புரிமை (Copyright) உண்டு.

**தனித்துவம்:** இயந்திரங்களால் செய்ய முடியாத, மனிதனின் கற்பனைத் திறன் மற்றும் உணர்வுகளை வெளிப்படுத்தும் வேலைகளாக இவை அமைகின்றன.

**வளர்ச்சி எந்திரங்களாக படைப்பாக்கத் தொழில்கள்**

21-ம் நூற்றாண்டு தொழில்துறை அளவுக்கு கற்பனையாலும் வடிவமைக்கப்படுகிறது. பொருளாதார பலம் என்பது தொழிற்சாலைகள், சரக்குப் போக்குவரத்து வழித்தடங்கள் ஆகியவற்றால் மட்டும் அளவிடப்படும் காலம் மாறி அறிவுசார் சொத்து, டிஜிட்டல் களங்கள், கலாச்சார செல்வாக்கு ஆகியவற்றாலும் அளவிடப்படுகிறது. சரக்குகளைவிட சிந்தனைகள் அதிகாரமாக பயணம் செய்கின்றன. கதையாடல்கள் சந்தைக்குள் செல்கின்றன. நாடுகள் எவ்வாறு உலக அளவில் பார்க்கப்படுகின்றன புரிந்துகொள்ளப் படுகின்றன என்பதை படைப்பாக்கச் சூழல்கள் தீர்மானிப்பது அதிகரித்துள்ளது. இந்தச் சூழலில் படைப்பாக்கப் பொருளாதாரம் வளர்ச்சியை தீர்மானிக்கும் ஒன்றாக உருவெடுத்துள்ளது.

படைப்பாக்க பொருளாதாரம் என்பது முதன்மையாக படைப்பாக்கம், கலாச்சாரம், தொழில்நுட்பம், அறிவுசார் சொத்து ஆகியவற்றால் உருவாக்கப்படும் தொழில்களை உள்ளடக்கியதாக நிற்கிறது. ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு, அனிமேஷன் மற்றும் ஒளிக்காட்சிகள், விளையாட்டு, நேரடி கலாச்சார அனுபவங்கள், டிஜிட்டல் உள்ளடக்கத் தளங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இந்த பொருளாதாரம் உள்ளது.

உலக அளவில் படைப்பாக்கத் தொழில்துறைகள் பல நாடுகளுக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.5 சதவீதம் முதல் 7 சதவீதம் வரை பங்களிப்பு செய்கின்றன. உலக அளவில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் அடிப்படையில் இந்தியாவின் படைப்பாக்கப் பொருளாதாரம் என்பது வளர்ச்சி, வேலைவாய்ப்பு, மதிப்புருவாக்கம் ஆகியவற்றின் முக்கிய தூணாக மாறியுள்ளது.

இந்தியாவில் 2024-ல் ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத்துறையின் மதிப்பு சுமார் 2.5 டிரில்லியன் ரூபாயாக இருந்தது. டிஜிட்டல் ஊடக கணக்கு இந்த துறையின் வருவாயில் மூன்றில் ஒரு பங்காக அனிமேஷன் மற்றும் ஒளிக்காட்சித்துறை மூலமான வருவாய் 103 பில்லியன் ரூபாயாகவும், விளையாட்டுத்துறை (கேமிங்) மூலமான வருவாய் 232 பில்லியன் ரூபாயாகவும், நேரலை பொழுதுபோக்கு மூலமான வருவாய் 100 பில்லியன் ரூபாயாகவும் இருந்தது. இந்தத் துறை மூலம் நேரடியாகவும் மறைமுகமாவும் 10 மில்லியன் பேர் வாழ்வாதாரம் பெறுகின்றனர். வருடாந்தர மொத்த வருவாய் சுமார் 3 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது.

இந்தியாவின் ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத்துறை சீராக தமது பாதையை விரிவுபடுத்தி 2027-க்குள் 7 சதவீத வருடாந்தர வளர்ச்சியை எட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதாவது 2024-ல் 2,502 பில்லியன் ரூபாய் என்பதிலிருந்து 2,027-ல் 3067 மில்லியன் ரூபாயாக அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கல்வி, திறன் வழங்குதல், நிறுவனங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்வதை மையமாகக் கொண்டே ஆரஞ்சு பொருளாதாரம் விரிவடையும். இதற்காக பள்ளிகளில் சிறப்பு வாய்ந்த பயிற்சி, புதிய கண்டுபிடிப்புடன் கூடிய தொழில் முனைவு ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படுகிறது. 15 ஆயிரம் மேல்நிலைப் பள்ளிகள் 500 கல்லூரிகள் ஆகியவற்றில் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஏவிஜிசி உள்ளடக்க உருவாக்க ஆய்வுக்கூடங்கள் மூலம், நிறுவன உந்துதல் வலுப்படுத்தப்படும். இந்த முன்முயற்சி திறமை வாய்ந்த புதிய தலைமுறையை தயார் செய்கிறது. இந்த வகையில் ஏவிஜிசி துறையில் 2030 வாக்கில் சுமார் 20 லட்சம் தொழில்முறையாளர்கள் தேவைப்படுவார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கொள்கை என்பது நடைமுறையிலிருந்து தனியானதாக இனி இருக்க முடியாது. கற்பனைத் திறன் என்பது வாழ்வாதாரங்களை, தொழில் நிறுவனங்களை சர்வதேச கூட்டாண்மைகளை உருவாக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. இதன் தாக்கம் ஏற்கனவே கண்கூடாக தெரியத் தொடங்கியுள்ளன. இளம் கலைஞர்கள் உலகளாவிய தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். படைப்பாக்க தொழில் துறைகள் மூலம் இந்தியா வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது. சேவைகளை ஏற்றுமதி செய்கிறது. தனது உலகளாவிய இருப்பை வலுப்படுத்திக் கொள்கிறது.


ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

Cell: 90805 54802, 99424 90217

**Prof. Dr. M.V. SUBBURAMAN**

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

# குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களின் ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கான ஊக்குவிப்புத் திட்டம்

தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் (MSME) ஏற்றுமதியை ஊக்குவிக்க 'ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை' (Export Promotion Policy) மற்றும் 'குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் கொள்கை' ஆகியவற்றின் கீழ் பல்வேறு சலுகைகள் வழங்கப்படுகின்றன.

**முக்கியமான திட்டங்கள் இதோ:**

**சந்தை மேம்பாட்டு உதவி (Market Development Assistance):** சர்வதேசக் கண்காட்சிகளில் பங்கேற்கவும், வெளிநாடுகளில் தங்கள் தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தவும்னிறீனிசி நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது.

**ஏற்றுமதி வழிகாட்டி மையங்கள் (Export Guidance Centers):** மாவட்ட தொழில் மையங்களில் (DIC) ஏற்றுமதி தொடர்பான சந்தேகங்களைத் தீர்க்கவும், உரிமங்கள் பெறவும் வழிகாட்டுதல் வழங்கப்படுகிறது.

**தரம் மற்றும் சான்றிதழ் மானியம்:** சர்வதேச தரச் சான்றிதழ்கள் (ISO, CE) பெறுவதற்கான செலவில் ஒரு பகுதி மானியமாகத் திரும்ப வழங்கப்படுகிறது.

MSME **ஏற்றுமதி குழுமம்** (Export Hubs): ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் விளையும் அல்லது தயாரிக்கப்படும் பொருட்களை சர்வதேச அளவில் கொண்டு செல்ல 'ஒரு மாவட்டம், ஒரு தயாரிப்பு' (ODOP) போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

**கடன் உதவி:** ஏற்றுமதிக்கு முந்தைய மற்றும் பிந்தைய தேவைகளுக்காகக் குறைந்த வட்டியில் கடன் வழங்க முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

**மத்திய அரசின் Ramp** (Raising and Accelerating MSME Performance) திட்டமும் இதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இத்திட்டம் உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் ஒரு முக்கியத் திட்டமாகும். இத்திட்டம் குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் போட்டித்தன்மையை சர்வதேச அளவில் உயர்த்தவும், ஏற்றுமதியை எளிதாக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**இதன் கீழ் செயல்படும் முக்கிய துணைத் திட்டங்கள் மற்றும் நன்மைகள்:**

**MSME TEAM Initiative:** ஜூன் 2024-ல் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், சிறு நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளை டிஜிட்டல் சந்தை (ONDC) மூலம் உலகெங்கும் கொண்டு செல்ல உதவுகிறது. இதற்காக ₹2,500 வரை டிஜிட்டல் பட்டியல் (Catalogue) உருவாக்கவும், ₹5,000 வரை கணக்கு மேலாண்மைக்கும் உதவி வழங்கப்படுகிறது. பேக்கேஜிங் வடிவமைப்பு மற்றும் போக்குவரத்துக் கட்டணங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

**முதல்முறை ஏற்றுமதியாளர்களுக்கான திறன் மேம்பாடு (CBFTE):** முதல்முறையாக ஏற்றுமதி செய்ய விரும்பும் னிறீனிசி நிறுவனங்களுக்குத் தேவையான பயிற்சிகள், சர்வதேசத் தரச் சான்றிதழ்கள் பெறுவதற்கான உதவி மற்றும் ஏற்றுமதி சந்தைகளைக் கண்டறியும் வழிமுறைகள் இதில் வழங்கப்படுகின்றன.

**பசுமை முதலீட்டுத் திட்டம் (MSE GIFT Scheme):** நிறுவனங்கள் சுற்றுச்சூழல் பாதிப்பற்ற நவீன தொழில்நுட்பங்களைப் புகுத்த குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படுகிறது. இது ஐரோப்பிய நாடுகள் போன்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்யும் போது அவசியமான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய உதவும்.

**தாமதமான நிலுவைத் தொகை தீர்வு (MSE ODR):** ஏற்றுமதி செய்த பொருட்களுக்கான தொகை தாமதமாவதைத் தவிர்க்க, ஆன்லைன் மூலம் விரைவாகப் புகார்களைத் தீர்க்கும் வசதி (Online Dispute Resolution) மேம்படுத்தப்பட்டுள்ளது.

**நிதி உதவி:** இத்திட்டத்தின் மொத்த மதிப்பு சுமார் ₹6,062 கோடி ஆகும். இதில் உலக வங்கி ₹3,750 கோடி கடனாக வழங்குகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் பயன் பெற உங்கள் நிறுவனம் Udyam போர்ட்டலில் பதிவு செய்திருக்க வேண்டியது அவசியம்.

# ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றமில்லை

ரெப்போ வட்டி விகிதம் குறித்து சஞ்சய் மல்ஹோத்ரா மேலும் கூறியதாவது: இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி சிறப்பாக உள்ளது. தற்போதைய சூழலைக் கருத்தில் கொண்டு வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் கடனுக்கான ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றம் செய்யப்படவில்லை. இந்த வட்டி விகிதம் 5.25 சதவீதமாகவே நீடிக்கும். இந்தியா - அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு உள்ளது. இதன் மூலம் டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு அதிகரிக்கும்.

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) 6.5 சதவீதமாக இருக்கும். இரண்டாம் காலாண்டில் 7 சதவீதம், மூன்றாம் காலாண்டில் 7 சதவீதம், நான்காம் காலாண்டில் 6.5 சதவீதமாக இருக்கும். ஒட்டுமொத்தமாக 2026-ம் ஆண்டின் ஜிடிபி 7.4 சதவீதமாக இருக்கும். நாட்டின் பண வீக்கம் 2.1 சதவீதமாக நீடிக்கும். இவ்வாறு சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்தார்.

ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றம் செய்யப் படாததால் பொதுமக்கள் பெற்றுள்ள வீடு, வாகன கடன்களுக்கான வட்டியிலும் மாற்றம் இருக்காது என்று பொதுத்துறை வங்கிகளின் மூத்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# A GRADE தரம் உயர்ந்த NSIC

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய சிறுதொழில் கழகம் (NSIC), கடந்த ஏழு தசாப்தங்களாக இந்தியா முழுவதும் சிறு தொழில்களின் வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றி வருகிறது. இந்நிலையில், இந்திய அரசு பிப்ரவரி 26, 2026 தேதியிட்ட அறிவிக்கையின் மூலம், NSIC "B" பிரிவிலிருந்து பிரிவு "A" பொதுத்துறை நிறுவனமாகத் தரம் உயர்த்தியுள்ளது.

திறன் மேம்பாடு, சந்தைப்படுத்தல் உதவி, கடன் வசதி மற்றும் நிதி முதலீடு போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மூலம் சிறுகுறு நடுத்தர தொழில்களுக்கு என்எஸ்ஐசிஆதரவு அளிக்கிறது. மேலும், அரசின் பல முக்கியத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் இது ஒரு கூட்டாளியாகச் செயல்படுகிறது. பிரிவு "A" அந்தஸ்து கிடைப்பதன் மூலம், NSIC-ன் மேலாண்மை மற்றும் நிதி அதிகாரங்கள் அதிகரிக்கும்; இது சிறு தொழில்களுக்கு அது வழங்கும் ஆதரவை மேலும் வலுப்படுத்தும்.

2024-25 ஆம் ஆண்டிற்கான பொதுத்துறை நிறுவனங்கள் துறையின் மதிப்பீட்டில் NSIC சிறந்த தரவரிசையைப் பெற்றுள்ளது. இது அந்த நிறுவனத்தின் தொடர்ச்சியான முயற்சிக்குக் கிடைத்த அங்கீகாரமாகும். இப்புதிய அந்தஸ்து, புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் சிறு தொழில் முனைவோருக்குத் தேவையான உள்கட்டமைப்புகளை மேம்படுத்தப் பெரிதும் உதவும்.

# குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு (MSME) அறிவிக்கப்பட்டுள்ள மிக முக்கியமான நன்மைகள்

2026-27 மத்திய பட்ஜெட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு (MSME) அறிவிக்கப்பட்டுள்ள மிக முக்கியமான நன்மைகள் இதோ:

**1. நிதி மற்றும் மூலதன உதவி**

- **SME வளர்ச்சி நிதி (SME Growth Fund)**: வளரும் வாய்ப்புள்ள சிறு நிறுவனங்களை பெரிய அளவில் மாற்ற ₹10,000 கோடி மதிப்பிலான புதிய நிதி உருவாக்கப்பட்டுள்ளது.
- SIDBI **முதலீடு**: சிட்பி (SIDBI) வங்கிக்கு ₹5,000 கோடி கூடுதல் நிதி வழங்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் சுமார் 25 லட்சம் புதிய சிறு தொழில் முனைவோருக்கு பிணையில்லா கடன் (Collateral-free credit) கிடைக்கும்.
- **அவசர கால கடன்** (GECL): உலகளாவிய பொருளாதார மாற்றங்களால் ஏற்படும் பாதிப்புகளை சமாளிக்க ₹9,000 கோடி அவசர கால கடன் வசதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2. நிலுவைத் தொகை வசூலிப்பதில் மாற்றம்**

- **கட்டாய TReDS முறை:** அரசு நிறுவனங்கள் (CPSEs) சிறு தொழில்களிடம் வாங்கும் பொருட்களுக்கான தொகையை விரைவாக வழங்க TReDS தளத்தைப் பயன்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இது நிலுவைத் தொகை சிக்கலைத் தீர்க்க உதவும்.
- **GeM இணைப்பு**: அரசு கொள்முதல் இணையதளமான 'GeM' உடன் நிதி நிறுவனங்கள் இணைக்கப்படுவதால், ஆர்டர்களைக் காட்டி எளிதாக கடன் பெற முடியும்.

**3. ஏற்றுமதி மற்றும் சந்தை வாய்ப்புகள்**

- **கூரியர் ஏற்றுமதி:** கூரியர் மூலம் பொருட்களை ஏற்றுமதி செய்ய இருந்த ₹10 லட்சம் உச்சவரம்பு நீக்கப்பட்டுள்ளது. இதனால் சிறு கைவினைஞர்கள் மற்றும் ஆன்லைன் வர்த்தகர்கள் வெளிநாடுகளுக்கு எளிதாக பொருட்களை அனுப்பலாம்.
- **தொழில்பேட்டை மேம்பாடு**: நாட்டில் உள்ள 200 பழைய தொழில்பேட்டைகளை (Legacy Clusters) நவீனப்படுத்தவும், அங்கு உள்கட்டமைப்பை மேம்படுத்தவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**4. வரி மற்றும் நிர்வாக எளிமை**

- **தவறுகளைத் திருத்த வாய்ப்பு**: வரித் தாக்கல் செய்வதில் ஏற்படும் பிழைகளைத் திருத்தி மீண்டும் சமர்ப்பிக்க (Revised Return) மார்ச் 31 வரை காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது.
- **கார்ப்பரேட் மித்ரா** (Corporate Mitras): சிறு நகரங்களில் உள்ள MSME-களுக்கு ஜிஎஸ்டி (GST) மற்றும் இதர சட்ட நடைமுறைகளை குறைந்த செலவில் செய்து தர நிபுணர்கள் நியமிக்கப்படுவார்கள்.
- **குற்றவியல் நடவடிக்கை குறைப்பு**: கணக்குப் புத்தகங்களை சமர்ப்பிக்காதது போன்ற சிறிய தவறுகளுக்காக எடுக்கப்படும் கடுமையான சட்ட நடவடிக்கைகள் குறைக்கப்பட்டுள்ளன.

**5. தொழில்நுட்ப உதவி**

- **ஹை-டெக் டூல் ரூம்கள்**: அதிநவீன இயந்திரங்கள் மற்றும் சோதனைக் கூடங்களை (Testing labs) சிறு தொழில்கள் குறைந்த கட்டணத்தில் பயன்படுத்திக் கொள்ள அரசு வழிவகை செய்துள்ளது.

# சேவைத் துறையைச் சார்ந்த சிறு தொழில் நிறுவனங்களுக்கான நன்கைள்

2026-27 பட்ஜெட்டில் சேவைத் துறையைச் (Service Sector) சார்ந்த சிறு தொழில்களுக்கு (MSME) அறிவிக்கப்பட்டுள்ள பிரத்யேக நன்மைகள் மற்றும் திட்டங்கள் இதோ:

**1. டிஜிட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவை** (IT & Digital Services)

- **AI மற்றும் கிளவுட் மானியம்**: சேவைத் துறையில் உள்ள நிறுவனங்கள் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் கிளவுட் கம்ப்யூட்டிங் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த ஊக்குவிக்க 'டிஜிட்டல் டிரான்ஸ்ஃபர்மேஷன்' திட்டத்தின் கீழ் மானியங்கள் வழங்கப்படுகின்றன.
- **Lakhpati Didi 2.0**: சேவைத் துறையில் ஈடுபடும் பெண் தொழில்முனைவோருக்காக (உதாரணமாக: டெய்லரிங், கேட்டரிங், அழகுக்கலை) மேம்படுத்தப்பட்ட திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**2. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறை** (Tourism & Hospitality)

- **சுற்றுலா கடன்:** ஹோட்டல்கள், தங்கும் விடுதிகள் மற்றும் சுற்றுலா வழிகாட்டி (Travel Agents) போன்ற சேவைகளில் ஈடுபடுவோருக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்க 'தேசிய சுற்றுலா மிஷன்' கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- **Eco-Tourism**: தமிழ்நாட்டின் நீலகிரி மற்றும் கொடைக்கானல் போன்ற பகுதிகளில் சூழல் சுற்றுலா (Eco-tourism) சேவைகளைத் தொடங்கும் ஸ்டார்ட்-அப்களுக்கு வரிச் சலுகைகள் உண்டு.

**3. தளவாடங்கள் மற்றும் விநியோக சேவை** (Logistics & Delivery)

- **PM Gati Shakti**: சரக்கு போக்குவரத்து மற்றும் விநியோக சேவையில் (Logistics) ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு, உள்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள சிறப்பு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.
- **மின்சார வாகனங்கள்** (EV): டெலிவரி சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் மின்சார வாகனங்களுக்கு மாறினால், FAME-III திட்டத்தின் கீழ் மானியம் மற்றும் குறைந்த வட்டி கடன் கிடைக்கும்.

**4. கல்வி மற்றும் திறன் மேம்பாடு** (EdTech & Training)

- **வேலைவாய்ப்பு ஊக்கத்தொகை** (ELBE Scheme): முதல்முறை வேலைக்குச் சேருபவர்களுக்கு பிஎஃப் (ஊபிஎஃப்) பங்களிப்பை அரசே ஏற்கும் திட்டம் சேவைத் துறை நிறுவனங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.
- **அனிமேஷன் & கேமிங்** (AVGC): கல்வி மற்றும் பொழுதுபோக்கு சேவைத் துறையில் உள்ள நிறுவனங்களுக்கு 'AVGC-Task Force' மூலம் புதிய தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படும்.

**5. நிதி மற்றும் நிர்வாக நன்மைகள்**

- **முத்ரா கடன்** (Mudra Loan): சேவைத் துறையில் தொழில் தொடங்குபவர்களுக்கான முத்ரா கடன் உச்சவரம்பு ₹20 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது (தகுதியுள்ளவர்களுக்கு).
- **வரிச் சலுகை:** சேவைத் துறையில் உள்ள புதிய ஸ்டார்ட்-அப் (Start-up) நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட வரி விடுமுறை (Tax Holiday) மார்ச் 31, 2027 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

# அச்சுத் துறை (Printing Industry) சார்ந்த சேவை நிறுவனங்களுக்கு 2026-27 பட்ஜெட்டில் வழங்கப்பட்டுள்ள நன்மைகளை

அச்சுத் துறையானது தற்போது டிஜிட்டல் மயமாகி வருவதால், அதற்குத் தேவையான தொழில்நுட்ப மாற்றங்களுக்கு இந்த பட்ஜெட்டில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது:

**1. இயந்திரங்கள் இறக்குமதி மற்றும் வரிச் சலுகை**

- **சுங்க வரி குறைப்பு**: வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அதிநவீன டிஜிட்டல் பிரிண்டிங் இயந்திரங்கள் மற்றும் அவற்றின் உதிரிபாகங்கள் மீதான சுங்க வரி குறைக்கப்பட்டுள்ளது. இது உங்கள் முதலீட்டுச் செலவைக் குறைக்கும்.
- **உள்ளூர் தயாரிப்பு:** இந்தியாவில் அச்சு இயந்திரங்கள் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுவதால், உள்நாட்டு இயந்திரங்களின் விலையும் குறைய வாய்ப்புள்ளது.

**2. பேக்கேஜிங் மற்றும் ஏற்றுமதி வாய்ப்பு**

- **பேக்கேஜிங் ஹப்:** அச்சுத் துறையின் ஒரு அங்கமான 'பேக்கேஜிங்' (Packaging) துறைக்குத் தனி கவனம் செலுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, உணவு மற்றும் மருந்துப் பொருட்களைப் பேக் செய்யும் நிறுவனங்களுக்கு PLI (Productivity Linked Incentive) போன்ற சலுகைகள் கிடைக்கும்.
- **கூரியர் ஏற்றுமதி சலுகை:** நீங்கள் அச்சிட்ட புத்தகங்கள் அல்லது வடிவமைப்புகளை வெளிநாடுகளுக்கு அனுப்பும்போது, அதன் மதிப்பு ₹10 லட்சத்தைத் தாண்டினாலும் இப்போது எளிதாக ஏற்றுமதி செய்ய முடியும்.

**3. கடன் மற்றும் மானிய வசதிகள்**

- **தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி (CLCSS):** பழைய அச்சு இயந்திரங்களுக்குப் பதிலாக புதிய டிஜிட்டல் இயந்திரங்களை வாங்கும்போது, அதற்கான கடனில் 15% வரை மானியம் (Subsidy) பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- **சிட்பி (SIDBI) கடன்:** அச்சுத் துறை போன்ற சேவை சார்ந்த MSME-களுக்கு பிணையில்லா கடன் (Collateral-free loan) பெறுவதற்கான வரம்பு உயர்த்தப்பட்டுள்ளது.

**4. மின்சாரம் மற்றும் சுற்றுச்சூழல்**

- **சோலார் மானியம்:** அச்சுத் தொழிலில் மின்சாரத் தேவை அதிகம் என்பதால், உங்கள் நிறுவனத்தின் கூரையில் சூரிய ஒளி மின்சாரம் (Rooftop Solar) அமைக்க அரசு வழங்கும் மானியத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இது உங்கள் மாதாந்திர மின்சாரச் செலவை 40-50% வரை குறைக்கும்.
- **சுற்றுச்சூழல் நட்பு அச்சு:** பிளாஸ்டிக் பயன்பாட்டிற்குப் பதில் காகித அடிப்படையிலான அச்சு (Paper-based printing) செய்யும் நிறுவனங்களுக்கு சிறப்பு வரிச் சலுகைகள் உண்டு.

**5. திறன் மேம்பாடு** (Skill Development)

- **தொழில்நுட்பப் பயிற்சி:** அச்சுத் துறையில் நவீன மென்பொருட்கள் (InDesign, CorelDraw, 3D Printing) மற்றும் இயந்திரங்களை இயக்கத் தேவையான பயிற்சிகளை ஊழியர்களுக்கு வழங்க, அரசுப் பயிற்சி மையங்களுடன் இணைந்து செயல்பட நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

# பிளாஸ்டிக் துறைகக்கான பட்ஜெட் 2026 அறிவிப்புகள்

**1. இறக்குமதி வரி குறைப்பு** (Customs Duty Reduction)

பிளாஸ்டிக் மூலப்பொருட்களின் விலையைக் குறைத்து, உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்க இறக்குமதி வரியில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன:

- PVC **மற்றும் பிற பாலிமர் ரெசின்கள்**: பிவிசி (PVC) மற்றும் இதர ஹாலஜனேற்றப்பட்ட பாலிமர் ரெசின்கள் (Halogenated polymer resins) மீதான இறக்குமதி வரி 10%-லிருந்து 7.5%-ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.
- **Vinyl Chloride** : இதன் மீதான இறக்குமதி வரியும் 7.5%-ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இது பிளாஸ்டிக் குழாய்கள் மற்றும் கட்டுமானப் பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனங்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும்.

**2. உட்கட்டமைப்பு மூலம் புதிய வாய்ப்புகள்**

மத்திய பட்ஜெட்டில் உட்கட்டமைப்புச் செலவினம் (Capital Expenditure) ₹12.2 லட்சம் கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இது பிளாஸ்டிக் துறைக்கு மறைமுகமான பெரிய வர்த்தக வாய்ப்புகளை உருவாக்கும்:

- **பிளாஸ்டிக் குழாய்கள்** (Piping): 2 மற்றும் 3-ஆம் கட்ட நகரங்களில் (Tier 2 & 3 cities) நீர் மேலாண்மை, பாதாளச் சாக்கடை மற்றும் எரிவாயு விநியோகத் திட்டங்கள் விரிவுபடுத்தப்படுவதால், பிளாஸ்டிக் குழாய்களுக்கான தேவை அதிகரிக்கும்.
- **கட்டுமானப் பொருட்கள்**: புதிய வீட்டுவசதித் திட்டங்கள் மற்றும் நகர மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் பிளாஸ்டிக் தண்ணீர் தொட்டிகள், செப்டிக் டேங்க் மற்றும் இதர கட்டுமானத் தளவாடங்களின் விற்பனை உயரும்.

**3. சுழற்சிப் பொருளாதாரம்** (Circular Economy & Recycling)

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் 'மறுசுழற்சி' (Recycling) செய்யும் பிளாஸ்டிக் நிறுவனங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது:

- **மறுசுழற்சி பிளாஸ்டிக்** (rPET): பேக்கேஜிங் மற்றும் ஏற்றுமதித் துறையில் மறுசுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்க புதிய கொள்கை வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- **ரசாயன மறுசுழற்சி** (Chemical Recycling): பிளாஸ்டிக் கழிவுகளை மீண்டும் மூலப்பொருளாக மாற்றும் ரசாயன மறுசுழற்சி தொழில்நுட்பத்திற்கு ஊக்கத்தொகை வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**4. MSME-களுக்கான ஆதரவு:** பிளாஸ்டிக் துறையில் பெரும்பாலானவை சிறு மற்றும் குறு நிறுவனங்கள் (MSME) என்பதால், அவற்றுக்கான பொதுவான பட்ஜெட் அறிவிப்புகளும் இத்துறைக்கு உதவும்:

- SME **வளர்ச்சி நிதி:** அதிக திறன் கொண்ட சிறு நிறுவனங்களை ஊக்குவிக்க ₹10,000 கோடி மதிப்பிலான புதிய நிதி அறிவிக்கப்பட்டுள்ளது.
- **தொழில்நுட்ப மேம்பாடு:** பிளாஸ்டிக் பொருட்களை உலகத் தரத்திற்கு இணையாகத் தயாரிக்க, தொழில்நுட்ப மேம்பாட்டிற்கான எளிய கடன் வசதிகள் சிட்பி (SIDBI) வங்கி மூலம் வழங்கப்படும்.

**5. பிளாஸ்டிக் மாற்றுகள்** (Single-Use Plastic Alternatives)

மீண்டும் பயன்படுத்தக்கூடிய (Reusable) மற்றும் மக்கும் தன்மை கொண்ட (Biodegradable) பேக்கேஜிங் பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு சிறப்பு வரிச் சலுகைகள் மற்றும் மானியங்கள் தொடர்ந்து முன்னுரிமை அளிக்கப்படுகின்றன.

# சேலம் கைத்தறி தொழில்நுட்பக் கழகத்தின் சிறப்புகள்

சேலத்தில் உள்ள இந்திய கைத்தறி தொழில்நுட்பக் கழகம் (Indian Institute of Handloom Technology - IIHT), கைத்தறி மற்றும் ஜவுளித் துறையை மேம்படுத்துவதற்காகவும், அத்துறையில் சிறந்த தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்குவதற்காகவும் தோற்றுவிக்கப்பட்டது.

இந்தக் கழகத்தின் முக்கியப் பயன்பாடுகள் பின்வருமாறு:

**1. உயர்கல்வி மற்றும் திறன் மேம்பாடு:** பட்டயப் படிப்பு (Diploma): கைத்தறி மற்றும் ஜவுளித் தொழில்நுட்பத்தில் (DHTT) மூன்று ஆண்டு கால டிப்ளமோ படிப்பை வழங்குகிறது. இது நெசவு, வடிவமைப்பு மற்றும் நூல் பதப்படுத்துதல் ஆகியவற்றில் மாணவர்களுக்குத் தொழில்நுட்ப அறிவை வழங்குகிறது.

**பி.டெக்** (B.Tech): இந்தியாவில் முதன்முறையாக கைத்தறி மற்றும் ஜவுளித் தொழில்நுட்பத்தில் இளங்கலைப் பொறியியல் (B.Tech) படிப்பை இக்கழகம் வழங்குகிறது. இது அண்ணா பல்கலைக்கழகத்துடன் (Anna University) இணைக்கப்பட்டது.

**2. தொழில் வாய்ப்புகள் மற்றும் ஆலோசனைகள்:** இக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் நெசவு ஆலைகள், ஆடை வடிவமைப்புக் கூடங்கள் மற்றும் அரசு சார்ந்த ஜவுளித் துறைகளில் தொழில்நுட்ப மேலாளர்களாகவும் வடிவமைப்பாளர்களாகவும் பணியமர்த்தப்படுகிறார்கள்.

கைத்தறித் துறையில் புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்துதல் மற்றும் நெசவாளர்களுக்குத் தேவையான நவீன கருவிகளை உருவாக்குதல் போன்றவற்றில் இது முக்கியப் பங்கு வகிக்கிறது.

**3. கைத்தறித் துறையின் நவீனமயமாக்கல்:** கைத்தறி நெசவு முறைகளை நவீனப்படுத்தி, உலகளாவிய ஜவுளிச் சந்தையில் இந்தியாவின் போட்டித்தன்மையை அதிகரிக்கச் செய்கிறது.

புதிய வடிவமைப்புகள் (Designing), தரக் கட்டுப்பாடு (Quality Control), சந்தைப்படுத்துதல் (Marketing) மற்றும் ஏற்றுமதி (சிமுஸ்ரீலிஷிமிவி) சார்ந்த பயிற்சிகளை வழங்கி இத்துறை சார்ந்த தொழில்முனைவோர்களை உருவாக்குகிறது.

**4. கைத்தறிப் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல்:** கைத்தறி நெசவு ஒரு பாரம்பரியக் கலை என்பதால், அதன் நுட்பங்கள் அழியாமல் இருக்கவும், அதை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லவும் இந்தக் கழகம் ஒரு பாலமாகச் செயல்படுகிறது.

# லிப்ட் அறிமுகமான விதம்

உலகுக்கு லிப்ட்-ஐ அறிமுகப்படுத்தியது ஓட்ஸ் என்ற நிறுவனம்தான். இந்த நிறுவனம் சார்பில் நியூயார்க்-ல் உள்ள இ.வி.ஹேவுட் என்ற பல்பொருள் அங்காடியின் 5 மாடி கட்டடத்தில் செயல்படுத்துவதற்காக 1857-ம் ஆண்டு ல்ப்ட் அமைக்கப்பட்டது. அப்போது லிப்ட்-ஐ இயக்குவதற்கு நீராவி இயந்திரங்களைப் பயன்படுத்தினர். அந்த இயந்திரத்தின் வேகம் நிமிடத்துக்கு 40 அடிகளாகும். தற்போது அதன் வேகம் ஒரு நிமிடத்துக்கு 1800 அடிகளாகும்.

# தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்க சான்றிதழ் படிப்பு

**(Certificate Program on Entrepreneurship and Innovation - CPEI)**

தமிழ்நாடு அரசின் EDII-TN மூலம் நடத்தப்படும் இந்த படிப்பு, புதிய தொழில் தொடங்குவதற்கான திறன்களையும் நுணுக்கங்களையும் கற்றுக்கொடுக்கும் ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

**திட்டத்தின் முக்கிய சிறப்பம்சங்கள்:**

**பயிற்சி:** தொழில் வாய்ப்புகளைக் கண்டறிதல், திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஸ்டார்ட்-அப் மேலாண்மை.

**தகுதி:** ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு அல்லது டிப்ளமோ/ஞாவீஞா (2 வருட அனுபவத்துடன்).

**வயது வரம்பு:** 20 முதல் 40 வயது வரை.

**கட்டணம்:** ₹80,000/- (வங்கி கடன் வசதி உண்டு).

**இடம்:** சென்னை கிண்டியில் உள்ள EDII-TN வளாகம்.

**மாணவர்களுக்கான நன்மைகள்:**

**நிதியுதவி:** TANSeed நிதி மற்றும் IVP Voucher (A & B) மூலம் ஐடியாவிலிருந்து தயாரிப்பு வரை நிதியுதவி பெற வழிவகை செய்யப்படும்.

**நடைமுறை அறிவு:** IIT Research Park மற்றும் i-TNT Hub போன்ற அரசு நிறுவனங்களுக்கு நேரடி களப்பயணம்.

**வசதிகள்:** தமிழகம் முழுவதும் உள்ள 9 இன்குபேஷன் சென்டர்களை பயன்படுத்தும் வாய்ப்பு மற்றும் தங்கும் விடுதி வசதி.

**சேர்க்கை தொடர்பான விவரங்களுக்கு:** 8668101638 / 8668107552 ஆகிய எண்களைத் தொடர்பு கொள்ளலாம். மதுரை தொடர்புக்கு - திருமதி. வி. அர்ச்சனா - 93424 92214

# mAadhaar செயலிக்கு மாற்றாக, அதிநவீன புதிய இ-ஆதார்

இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) தற்போதுள்ள mAadhaar செயலிக்கு மாற்றாக, அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய இ-ஆதார் (e-Aadhaar App) செயலியை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது. UIDAI அதிகாரப்பூர்வ இணையதளம் வாயிலாக இந்த அப்டேட்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

**இந்த புதிய செயலியின் சிறப்பம்சங்கள்:**

- அலுவலகங்களுக்குச் செல்லாமல், உங்கள் மொபைல் மூலமாகவே பெயர், முகவரி, பிறந்த தேதி மற்றும் பாலினம் ஆகியவற்றை மிக எளிதாக மாற்றிக்கொள்ளலாம்.
- முகவரி மாற்றத்திற்கான ஆவணங்களைச் சரிபார்க்க செயற்கை நுண்ணறிவு (AI) பயன்படுத்தப்படும், இதனால் திருத்தங்கள் உடனுக்குடன் அங்கீகரிக்கப்படும்.
- பிளாஸ்டிக் கார்டுகள் இல்லாமலேயே, இந்த செயலியில் உள்ள டிஜிட்டல் ஆதாரைக் காட்டி விமான நிலையம் மற்றும் ரயில் நிலையங்களில் பயணிக்கலாம்.
- பயோமெட்ரிக் தரவுகளை (Biometric Lock/Unlock) செயலி மூலமே கட்டுப்படுத்தும் வசதி மேம்படுத்தப்பட்டுள்ளது.
- இணைய வசதி இல்லாமலேயே உங்கள் விவரங்களைச் சரிபார்க்க ஆஃப்லைன் QR கோடு வசதியும் இதில் இருக்கும்.

முக்கிய குறிப்பு: உங்கள் மொபைல் எண் ஆதாருடன் இணைக்கப்பட்டிருந்தால் மட்டுமே இந்தச் சேவைகளை முழுமையாகப் பயன்படுத்த முடியும்.

# இந்தியாவிலுள்ள தேசிய தொழில்துறை வழித்தடம்

## National Industrial Corridor

தேசிய தொழில்துறை வழித்தட மேம்பாட்டுத் திட்டம் (NICDP) National Industrial Corridor Development and Implementation Trustஎன்பது இந்தியாவை உலகளாவிய உற்பத்தி மையமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு விரிவான உள்கட்டமைப்புத் திட்டமாகும். இது நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய 'ஸ்மார்ட் தொழில்துறை நகரங்களை' உருவாக்கி, சரக்கு போக்குவரத்துக் செலவைக் குறைக்கவும், அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் செயல்படுத்தப்படுகிறது.

**முக்கிய சிறப்பம்சங்கள்:**

**நிர்வாக அமைப்பு:** இத்திட்டத்தை தேசிய தொழில்துறை வழித்தட மேம்பாட்டுக் கழகம் (NICDC) நிர்வகிக்கிறது. இது மத்திய வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்குகிறது.

**நோக்கம்:** 2030-ஆம் ஆண்டிற்குள் ×2 டிரில்லியன் ஏற்றுமதி இலக்கை எட்டவும், 10 கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் இது இலக்கு நிர்ணயித்துள்ளது.

**வசதிகள்:** தொழில் நிறுவனங்கள் உடனடியாக உற்பத்தியைத் தொடங்கும் வகையில் 'பிளக்-அண்ட்-ப்ளே' (Plug-and-Play) எனப்படும் நவீன உள்கட்டமைப்பு வசதிகள் இங்கு வழங்கப்படுகின்றன.

**இணைப்பு:** சாலைகள், ரயில்வே, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களுடன் பலமாதிரிப் போக்குவரத்து (Multi-modal) இணைப்பை உறுதி செய்கிறது.

**இந்தியாவில் உள்ள முக்கிய வழித்தடங்கள்:**

தற்போது இந்தியா முழுவதும் 11 முக்கிய தொழில்துறை வழித்தடங்கள் திட்டமிடப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| டெல்லி | – மும்பை தொழில்துறை வழித்தடம் (DMIC) |
| சென்னை | – பெங்களூரு தொழில்துறை வழித்தடம் (CBIC) |
| அமிர்தசரஸ் | – கொல்கத்தா தொழில்துறை வழித்தடம் (AKIC) |
| விசாகப்பட்டினம் | – சென்னை தொழில்துறை வழித்தடம் (VCIC) |
| பெங்களூரு | – மும்பை தொழில்துறை வழித்தடம் (BMIC) |
| ஒடிசா | –மேற்கு வங்காளம் & பல புதிய விரிவாக்கங்கள். |

**தமிழ்நாட்டில் தொழில்துறை வழித்தடங்கள்:**

இந்தியாவிலேயே அனைத்து மாவட்டங்களும் தொழில்துறை வழித்தட திட்டங்களின் கீழ் வரும் ஒரே மாநிலம் தமிழ்நாடு ஆகும். முக்கியமானவை:

சென்னை - பெங்களூரு தொழில்துறை வழித்தடம் (CBIC): பொன்னேரி இதன் முக்கிய மையமாகும்.

சென்னை - கன்னியாகுமரி தொழில்துறை வழித்தடம் (CKIC): கிழக்குக் கடற்கரைப் பொருளாதார வழித்தடத்தின் ஒரு பகுதியாகும்.

**பாதுகாப்பு தொழில்துறை வழித்தடம்:** சென்னை, திருச்சி, சேலம், ஓசூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களை உள்ளடக்கியது.

ஆகஸ்ட் 28, 2024 அன்று பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை, தேசிய தொழில்துறை வழித்தட மேம்பாட்டுத் திட்டத்தின் (NICDP) கீழ் 10 மாநிலங்களில் 12 புதிய தொழில்துறை ஸ்மார்ட் நகரங்களை அமைக்க ஒப்புதல் அளித்தது.

சுமார் ₹28,602 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படவுள்ள அந்த 12 இடங்களின் பட்டியல் இதோ:

| வ.எண் | மாநிலம் | | தொழில்துறை நகரம் / இடம் |
|---|---|---|---|
| 1 | ஆந்திரப் பிரதேசம் | - | கொப்பர்த்தி (Kopparthy) |
| 2 | ஆந்திரப் பிரதேசம் | - | ஓர்வக்கல் (Orvakal) |
| 3 | பீகார் | - | கயா (Gaya) |
| 4 | கேரளா | - | பாலக்காடு (Palakkad) |
| 5 | மகாராஷ்டிரா | - | திகி (Dighi) |
| 6 | பஞ்சாப் ராஜ்புரா | - | பாட்டியாலா (Rajpura-Patiala) |
| 7 | ராஜஸ்தான் | - | ஜோத்பூர்-பாலி (Jodhpur-Pali) |
| 8 | தெலுங்கானா | - | ஜகீராபாத் (Zaheerabad) |
| 9 | உத்தரப் பிரதேசம் | - | ஆக்ரா (Agra) |
| 10 | உத்தரப் பிரதேசம் | - | பிரயாக்ராஜ் (Prayagraj) |
| 11 | உத்தரகண்ட் | - | குர்பியா (Khurpia) |
| 12 | ஹரியானா / ஜார்க்கண்ட் | - | இசார் (Hisar) அல்லது ஜாம்ஷெட்பூர்-புருலியா-அசன்சோல் பகுதி |

**முக்கிய குறிப்புகள்:**

**வேலைவாய்ப்பு:** இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் 10 லட்சம் நேரடி வேலைவாய்ப்புகளும், 30 லட்சம் மறைமுக வேலைவாய்ப்புகளும் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வசதிகள்:** இவை 'பிளக்-அண்ட்-ப்ளே' (Plug-n-Play) மற்றும் 'வாக்-டு-ஒர்க்' (Walk-to-work) என்ற நவீனக் கொள்கைகளின் அடிப்படையில் உலகத்தரம் வாய்ந்த பசுமை நகரங்களாக உருவாக்கப்படும்.

**தமிழ்நாடு:** இந்த 12 புதிய நகரங்கள் பட்டியலில் தமிழ்நாட்டிற்கு இடம் ஒதுக்கப்படவில்லை. இருப்பினும், ஏற்கனவே சென்னை-பெங்களூரு மற்றும் சென்னை-கன்னியாகுமரி வழித்தடப் பணிகள் தமிழகத்தில் நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.






# ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்–ன்
# சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டம்

மார்ச் 8, மகளிர் தினக் கொண்டாட்டம் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்–ல் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி மகளிரின் தலைமையில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள், இந்த நிகழ்ச்சியை துவக்கி வைத்து, பின் நிகழ்ச்சியை ஆயுட்கால உறுப்பினர் திருமதி. சந்திரகலா குமரேசன் அவர்களிடம் ஒப்படைத்தார். உடன் திருமதி. துர்கா மோகன்ராம், திருமதி. வாசுகி ராம்தாஸ், திருமதி. வரலட்சுமி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. வசந்தி சேதுராம், திருமதி. சாவித்திரி ஶ்ரீதர் ஆகியோர் மேடையில் இடம்பெற்றனர்.

மருத்துவர். சங்கவி அவர்கள் விருந்தினர்களை மேடைக்கு அறிமுகம் செய்தார். சிறப்பு விருந்தினராக முனைவர் K.S. கோமதி Principal & Head, Madurai Gandhi NMR Subbaraman College for Women அவர்களும், கௌரவ விருந்தினராக மருத்துவர். கே. மங்கல லட்சுமி பிரீதம் Senior Consultant, Pritem Multispeciality Hospital அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

கௌரவ விருந்தினர மருத்துவர். கே. மங்கல லட்சுமி பிரீதம் அவர்கள் மகளிர் உடல் நலம் மற்றும் ஆரோக்கியம் சார்ந்த தகவல்களை வழங்கினார். சிறப்பு விருந்தினர் முனைவர். K.S. கோமதி அவர்கள், மகளிர் உரிமை, கல்வி, தன்னம்பிக்கையைப் பற்றி அழகாகவும் ஆக்கப்பூர்வமாகவும் வருகை தந்த அனைவரையும் கவரும் விதமாக பேசி அசத்தினார்.

இந்த நிகழ்வில், ஸௌராஷ்ட்ர சமூக இரண்டு பெண் தொழில் முனைவோர்களுக்கு சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. அதன்படி, திருமதி. பவானிஶ்ரீ விக்னேஷ் Founder & CEO., Raamiyas by Sakunthala, மருத்துவர். M.K. சித்ரா, சரவணா சர்ஜிகல்ஸ் ஆகியோருக்கு வழங்கப்பட்டன.

ஸௌராஷ்ட்ர கல்லூரி பேராசிரியர் திருமதி. சுகந்தி அவர்கள் இந்த நிகழ்ச்சிக்கு வர்ணனை செய்தார்.

நிகழ்ச்சிக்கு நூற்றுக்கும் அதிகமான மகளிர் ஆர்வத்துடன் கலந்து கொண்டது சிறப்பித்தனர். அவர்களுக்கு பயனுள்ள நினைவுப் பரிசுகள் சார்பாக வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியை முழுவதுமாக திருமதி. சந்திரகலா குமரேசன் அவர்கள் அவர்தம் குழுவினருடன் இணைந்து சிறப்பாக நடத்திச் சென்றது மகிழ்ச்சியளிக்கிறது.

இந்த மாபெரும் நிகழ்வில், நூற்றுக்கும் மேற்பட்ட மகளிர் கலந்து கொண்டு சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

நிறைவாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.


















# பாரதியின் புதுமைப்பெண்! அவள் ஒரு பார் அதிரும் அதிசயம் பார்!!

மகளிர்தினம் மாண்புடன் கொண்டாடப்படும் இந்த நூற்றாண்டில் ஆண்களுடனான எல்லா நிலையிலும் பெண்களது எல்லையில்லா பங்களிப்பு மகத்தானது என்பதை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

தன்னுயிர் தந்து ஓர் இன்னுயிர் ஈன்றெடுப்பதில் துவங்கும் தாயின் தொண்டு, அது, உடன் பிறந்தவளாக, தோழியாக, துணைவியாக, மகளென ஐந்து அரும்பெரும் பந்தங்களாகத் தொடர்கிறது.

பஞ்சபூதங்களால் பிரபஞ்சம் இயங்குகிறது என்பது எப்படி நிதர்சனமோ, அப்படிப்பட்ட உண்மைதான், இந்த ஐந்து உறவுகளால் ஆண்மகனில் உலகம் சுற்றுகிறது எனலாம்.

உவமான உவமேயங்களுடன் பார்க்கலாமே!

**நிலமாக:** வாழ்க்கையின் தொடக்கம் பூமியில் என்பதால், தாய் என்பவள் நிலம் என்றாகிறாள். ஆதியும் அந்தமும் இல்லாத ஆண்டவன்போல், நம் அங்கம்தனில் புதைந்திருக்கும் அன்புச்சுரங்கம். துன்பங்கள் அனைத்தையும் தாங்கிக்கொண்டு, ஆண்மை உயிர்வாழ; வேளாண்மையாக, உயர்வுபெற; மேலாண்மையாக, உத்தரவிட; அரசாண்மையாக, அவள் இன்றி ஓர் அணுவும் அசையாது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

**காற்றாக:** பிறப்பு என்பது மூச்சுக்காற்றுடன் ஆரம்பம் என்பதால், உடன் பிறந்தவள், காற்றுக்கு இணை. பல நேரங்களில் தென்றல் எனத் தாலாட்டும்; சில வேளைகளில் புயலென புரட்டிப்போடும். இருந்தாலும், அவள் தாய்வீட்டின் விசுவாசம் நிறைந்த சுவாசம்.

**நீராக:** தோழியை நீருக்கு உவமையாகக் கொள்ளலாம். நீர்த்துப் போகாத உறவு. மனதளவில் தனிமை என்ற தாகத்திற்கு ஒரே தீர்வு. உள்ளத்தில் உதிக்கும் கேள்விகளுக்கெல்லாம் விடையளிக்கும் ஊற்று. துயரங்களின் வடிகால். மகிழ்ச்சியின் நீர்வீழ்ச்சி. காலாற நடந்து கொண்டே வாய் பேசிவரும் கால்வாய். ஆறாகப் பெருகி ஓடும் சிந்தனைகளின் சங்கமம்.

**ஆகாயமாக:** மனைவி என்பவள் ஆகாயம் போன்றவள். கண்டங்களுக்கு அப்பாற்பட்ட, அகண்டு, வியாபித்து இருக்கும் உறவு. வாழ்வின் இடையில் வந்து இணைந்தாலும், கடைசிவரை துணை நிற்கும் ஒரே வரவு. தேவை ஏற்படும்போதெல்லாம், சமயத்திற்கு ஏற்றார்போல மாறி மாறி பொழியும் முன்மாதிரியற்ற மும்மாரி. அவள் இல்லாத வாழ்வு ஒரு வெறுமை.

**நெருப்பாக:** மகள் என்ற உறவை நெருப்புடன் ஒப்பிடலாம், அடுத்தவரிடம் ஒப்படைக்கப்படவேண்டியவள் என்பதாலே! வாழ்வின் நுட்பத்தை உணர்த்தும் வெப்பம். கவலை எனும் குளிர் சூழும்போது கைகொடுக்கும் கனல். தீயபழக்கத்திலிருந்து விலக்கி வைக்கும் தீ!! நோயுற்ற காலங்களில் தவறாமல் பங்கு பெற்று சேவை செய்யும் சுடுநீர் கங்கு.

மனிதனின் வாழ்வு புனிதம் அடைய, பஞ்சமா பாதங்களிலிருந்து விடுபட்டு வீடுபேறு பெற, இந்த ஐந்து உறவுகளில் அடங்கி அடைக்கலம் புகுவது ஒன்றே சாலச்சிறந்தது.

இத்தகைய ஆற்றல் பெற்ற, ஆளுமையுடைய பெண் இனத்தை சூரியன் அஸ்தமிக்காத நாடு எனக் கூறிக்கொள்ளும் மேலை நாட்டினர், Weaker Sex என்று கூறி இழிவு படுத்துவது, சூரியனைப் பார்த்து நாய் குரைத்தது போலாகும்.

தியாகத்தின் திருவுருவாய் திகழும் தாய்க்குலம், இன்று கல்வியில் முதன்மையாக (படிப்பை "மதி"க்கும் "பெண்"கள் என்பதால், அவர்கள் மதிப்பெண்களிலும் சாதனை புரிகிறார்கள்), பொருளாதாரத்தில்(தாரம் என்று வருவதாலே) முன்னிலை அடைந்து, எல்லை பாதுகாப்பு போன்ற வீரசெயல்களில் பயிற்சி பெற்று முப்பரிமாணங்களிலும் சிறந்து விளங்குகின்றது. விமானப் பணிப்பெண்களாக இருந்த காலம் மாறி விமான ஓட்டிகளாக அவர்தம் நிலையும் உயரே பறந்து கொண்டிருக்கிறது.

பாரதியின் கனவான பெண் சுதந்திரம் இப்பொழுது நிரந்தரம் ஆகிவிட்டது.

பெண்மையைப் போற்றுவோம். *– வீரஜா*

# வருமான வரி படிவம் எண்கள் ஏப்ரல் முதல் மாற்றம்

வருமான வரி தாக்கலுக்கான படிவம் தாக்கலுக்கான படிவம் 16 மற்றும் 26ஏ.எஸ்., எனப்படும் ஆண்டு வருமான அறிக்கை ஆகியவற்றின் எண்கள் புதிய வருமான வரி சட்டத்தின் கீழ் வரும் ஏப்ரல் மாதம் முதல் மாற்றப்படுகின்றன.

வருமான வரி தாக்கல் செய்யும் போது, படிவம் 16 மற்றும் 26 ஏ.எஸ்., என்பது வருமான வரித்துறையால் வழங்கப்படும் ஆண்டு வரி அறிக்கை. இதில், வரி பிடித்தம், டி.சி.எஸ்., எனப்படும் பொருட்கள் அல்லது சேவையை வாங்கிய போது வசூலிக்கப்பட்ட வரி ஆகிய தகவல்கள் இடம்பெற்றிருக்கும்.

படிவம் 16 என்பது, மாத சம்பளதாரர்களிடம் எவ்வளவு வரி பிடித்தம் செய்து அரசுக்கு செலுத்தப்பட்டுள்ளது என்பதற்காக நிறுவனத்தால் வழங்கப்படும் ஆவணம். வருமான வரி அறிக்கை தாக்கல் செய்வதற்கும், வங்கி கடன் போன்றவற்றுக்கும் இது தேவை.

இந்நிலையில் மத்திய அரசு, 1961ம் ஆண்டு வருமான வரி சட்டத்திற்கு மாற்றாக புதிய வருமான வரி சட்டத்தை கடந்த ஆண்டு பார்லிமென்டில் நிறைவேற்றியது. இது, 2026 ஏப்ரல் முதல் அமலுக்கு வருகிறது.

இதற்கான வருமான வரி வரைவு விதிகள் வெளியிடப் பட்டுள்ளன. அதில், சட்டத்தின் பிரிவுகள் எளிமைப்படுத்தப்பட்டு, படிவங்களின் எண்கள் மாற்றப்பட்டுள்ளன.

குறிப்பாக படிவம் 16 இனி படிவும் 130 எனவும், 26ஏ.எஸ்., படிவம் 168 எனவும் மாற்றப்பட்டுள்ளன. எண்கள் மாற்றப்பட்டாலும், அவற்றை தாக்கல் செய்வது பழைய முறையிலேயே தொடரும் என, வரி ஆலோசகர்கள் தெரிவித்தனர்.

# செயற்குழு கூட்டம்





நமது சௌராஷ்ட்ர சேம்பர்-ன் 9வது செயற்குழுக் கூட்டம் கடந்த 17.02.2026 அன்று மாலை யூனியன் கிளப்-ல் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர். முக்கியமாக, சிட்கான் 2026 மாநாடு சம்பந்தமாக விவாதிக்கப்பட்டது.

# வாழ்த்துக்கள்



நமது சௌராஷ்ட்ர சேம்பர்-ன் ஆயுட்கால மற்றும் போஷக உறுப்பினரான ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி.லிட்., நிறுவனத்தார் திரு. டி.ஆர். சுப்பிரமணியன் மற்றும் திரு. டி.எஸ். சிவப்பிரகாஷ் அவர்களுக்கு, முன்னோடி ஸ்டீல் தயாரிப்பாளர்களின் பங்களிப்பில் இயங்கும் பிக்-மின்ட் அமைப்பின் சார்பாக, தேசிய அளவிலான விருதை வழங்கி கௌரவித்துள்ளது. நமது சேம்பர் பெருமை கொள்கிறது. அவரது நிறுவனம் மென்மேலும் வளர சேம்பர் வாழ்த்துகிறது.




சௌராஷ்ட்ரீ மொழி ஆசிரியர் முனைவர். S.D. ஞானேஸ்வரன் அவர்களுக்கு டெல்லியில் நடைபெற்ற உலக கலாச்சார மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையம் கௌரவ முனைவர் விருதை கடந்த பிப்ரவரி மாதம் வழங்கி கௌரவித்துள்ளது.



அவரது சேவை மென் மேலும் வளர, நமது சேம்பர் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

# சிறப்பு சந்திப்பு




நமது சௌ. சேம்பர்-ன் பிப்ரவரி மாத லாப் ஸமாச்சார் வணிக இதழை ஜாஸ்மின் டவல்ஸ் நிறுவனத்தின் இயக்குநர் திரு. ரித்தன் நயன் தக்கர் அவர்கள் 20.02.2026 அன்று வெளியீடு செய்தார். இதழ் குழுவினர்கள் திரு. K.S. சிவக்குமார், இதழ்குழு சேர்மன் திரு. E.R.K. விக்னேஷ் பாபு, திரு. லகுடுவா பாஸ்கர், சேம்பர் துணைத்தலைவர் திரு. K.K. குபேந்திரன், திரு. K.K. ராம்குமார், திரு. K.K. சங்கர் ஆகியோர் இந்த சந்திப்பில் உடன் இருந்தனர்.









Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

**JSW COLOURON+ கூரைகள்**

**JSW Steel**

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





## ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

**Meerakunj** ®

RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

*Trust us with all your Electrical Plumbing and Agri needs...*



Architect's First Choice

Architects Suggest ...

The right way to sensible plumbing

Specialy Made for Borewells

Specialy Made for Watersupply



வாட்டர் டேங்கிற்கு 10வருட வாரண்டி

## மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

## VIGNESH GRAPHICS



*All Kinds of Printing Solution*

- Brouchers
- Wedding Cards
- Souvenirs & Directories
- Visiting Cards

Head Office : 79-A, South Marret Street, Madurai - 625 001.

Branch : No. 33, Manjanakara Street, Madurai - 625 001.

Branch : Plot No. 48/5, Chinna Anuppanadi, Industrial Plot Area, Near ABC Badminton Club, Mela Anuppanadi, Housing Board Colony, Madurai - 625 009.

O : 96980 11066 | Ph : 93441 01432 | 98434 14310 | Email : vgmadurai1@gmai.com

- Letter Pads
- Shopping Bags
- Paper Bags
- Menu Cards



விழித்து எழுந்தவுடன் கிடைப்பதில்லை வெற்றி ! விழுந்து எழுந்தவுடன் கிடைப்பதே வெற்றி !!

## ஸ்ரீ விஜயலெட்சுமி ஸ்கிரீன்

91506-00904, 99940-18805, 78128-19162

கதிர்வேல் நகர் 1 வது தெரு, 51/51, பாலு கொத்தனார் தெரு, மீனாட்சி நகர், வில்லாபுரம், மதுரை-12.

SINCE-1993 01-07-1993 31 Years 2023 SvlS

வெள்ளி விழா கண்ட நிறுவனம்

## விஜயலெட்சுமி DTP & ஸ்கிரீன்

அனைத்தும் சிறந்த முறையில் செய்து தரப்படும்

- தினசரி & கட்டிங் மாத காலண்டர்
- 12 DAYS DELIVERY மல்டிகலர் ஸ்டிக்கர்
- தமிழ் டைரி ஆங்கில டைரி
- 30 DAYS DELIVERY கோல்டு ஸ்டிக்கர்
- 20 DAYS DELIVERY ஜூட் பேக் & தாம்பூல பை
- பார்கோட் ஸ்டிக்கர் 5 to 10 DAYS DELIVERY
- விபூதி கவர் 7 DAYS DELIVERY
- சாமி படம் வுட்லேமினேசன்
- ஸ்கூல் லேபிள்



நட்பை விட ! நம்பிக்கையை விட !! நாணயமே சிறந்தது !!!

Cell : 98421-18873, 98428-18873

R.R. பாலகுமார்

R.R. குபேந்திரன்

R.R. பிரேம்குமார்

e.mail : svlsmadurai@gmail.com

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2025-2027
Printed Matter

Date of Posting : 20.03.2026 / BPC MDU
Date of Publication 20th of Every Month

KSPL,Madurai

**Kuttuva Silicates (P) Ltd.,**

5A, (New No.17) New Teppakulam Colony, Near Annai Chandramathi Mahal, Madurai-625 009.
Email: sales@kuttuvasilicates.com, https://www.kuttuvasilicates.com
Phone: Office: +91 452 2312293 / 98409 60846



Manufacturers of
Sodium Silicate Liquid
Sodium Meta Silicate Powder
Geo Polymer Concrete Liquid

SVOC Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy, Joint Replacement

**வேல் மருத்துவமனை**
**வேல் சிறப்பு எலும்பியல் மையம்**
Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

VALE HOSPITAL — RIGHT TREATMENT IS EVERYONE'S RIGHT

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597
Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com
Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.



24hrs Service



சிறப்பம்சங்கள்
- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

Experience the Expertise Advice

உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்
- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*

नवीन एवं नवीकरणीय ऊर्जा मंत्रालय
MINISTRY OF NEW AND RENEWABLE ENERGY
सत्यमेव जयते

தென் தமிழகத்தின்
**நம்பர் 1**
சோலார் நிறுவனம்

Premium Quality
30+ Years Warranty
100% Guarantee



Prakash Green Energy
Providing Perfect Solar Solutions

வீடுகளுக்கு
78000 ரூ
அரசு மானியமாக பெற்றுத் தரப்படும்

MSME
TANGEDCO

**அதிக மின் கட்டணம் செலுத்துகிறீர்களா ?**

உங்கள் வீடு, வணிக கட்டிடம் மற்றும் தொழிற்சாலைகளுக்கு அதிக மின் கட்டணம் செலுத்துவதை தவிர்த்திடுவீர்

வங்கி கடன் வசதியும் உண்டு. வட்டி விகிதம் 6.5% முதல்
+91 63749 01500
support@prakashgreenenergy.com
www.prakashgreenenergy.com
HEAD OFFICE:
14R, N.S Konar Street,
Jaihindpuram,Madurai - 625011

